**மாவத்தகம பிரதேச சபை - 2023**

**-------------------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாவத்தகம பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, மாவத்தகம பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 890,459 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரியாக கணித்தல் மேற்கொள்ளப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது செலுத்திய வட்டி, பங்கிலாபம் மற்றும் மிகை ஊதியம் செலுத்துதல் ரூபா 69,220 | வருமானச் செலவுக் கணக்கில் பதிவு செய்வதற்கு முடியாமல் போனது. பேரேட்டுக் கணக்குகள் | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | தயாரிக்கும் போது அதனை பேரேட்டில் பதியப்பட்டுள்ளது என. | |
| (இ) | சபையினால் வெளி நிறுவனம் ஒன்றுக்கு சாட்டப்பட்டிருந்த ரூபா 215,000 தொகை பெறுமதியுள்ள 02 காணிகள் நடைமுறை அல்லாத சொத்துக்கள் என காட்டப்பட்டிருந்தது. | முறையான செய்முறை ஒன்றின் படி காணிப் பதிவேட்டிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | ரூபா 200,000 தொகை பெறுமதியான காணியொன்று நிதிக்கூற்றுக்களின் இறுதிக் கணக்குகளில் ரூபா 2,000,000 தொகை என காட்டப்பட்டிருந்தது. | பெறுமதியினை வழங்கும் போது ஏற்பட்டிருந்த வழுவொன்றாகும். எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (உ) | ரூபா 18,590,000 தொகை பெறுமதியான காணியொன்று இரு தடவைகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (ஊ) | சிரிமாவோ பண்டாரநாயக முன்பள்ளி பாதுகாப்பு வேலியின் பெறுமதி ரூபா 2,000,000 தொகையினால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பெறுமதி வழங்கும் போது ஏற்பட்ட வழுவொன்றாகும் என. | - மேற்படி - |
| (எ) | மீளாய்வாண்டின் போது ஆயுர்வேத நிலையக் கட்டிடத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் மாவத்தகம பொதுச் சந்தைக் கட்டிடத் தொகுதியின் கழிவறை முறைமையின் திருத்த வேலைக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 1,464,579 தொகை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | சரி செய்தல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (ஏ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 7,529,060 தொகை நிதிக்கூற்றுக்களில் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | 2024 ஆண்டு இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்படும் என. | - மேற்படி - |
| (ஐ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஓய்வூதிய நிதியத்தின் பெறுமதி ரூபா 372,473 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஒ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளூராட்சி திணைக்களத்திலிருந்து பெற வேண்டிய ரூபா 497,000 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 424,680,555 தொகைக்கான 05 கணக்கு விடயங்களிற்கான மீதிகள் மற்றும் அட்டவணைகளிலே காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 1,852,076 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | எதிர்காலத்தில் குறிப்பிட்ட சரி செய்தல் மேற்கொள்ளப்படும் என. | வித்தியாசங்களுக்கான காரணங்களை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 3,921,950 இற்கான 09 கணக்கு விடயங்களுக்கான மீதிகள் மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் காட்டப்பட்டுள்ள மீதியிடையே ரூபா 9,302,000 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | - மேற்படி - | வித்தியாசங்களுக்கான காரணங்களை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 67,750,000 தொகைக்கான 20 மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள் தொடர்பான மீதிகள் மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் காட்டப்பட்டுள்ள பெறுமதியிடையே ரூபா 37,632,235 இற்காக வித்தியாசம் காணப்பட்டது. | எதிர் காலத்தில் நிலையான சொத்துக்கள் பதிவேடு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வித்தியாசங்களுக்கான காரணங்களை இனங்கண்டு சரி செய்ய வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 144,753 தொகைக்கான 08 நூலகங்களில் புத்தகங்கள் அகற்றுதல் பெறுமதி மற்றும் அப்புறப்படுத்துதல் பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் படி பெறுமதியிடையே ரூபா 82,938 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வித்தியாசங்களுக்கான காரணங்களை இனங்கண்டு சரி செய்ய வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் கூட்டுத்தொகை ரூபா 91,949,720 இற்கான 14 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாமல் இருந்தது. | தேவையான தகவல்கள் எதிர் காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | தாமதம் இன்றி குறிப்பிட்ட உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்க வேண்டும். |

### 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) | நி.பி. 371(3) | ரூபா 110,894 தொகை பெறுமதியான முற்பணங்கள் திசெம்பர் 31 திகதி அளவிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முற்பணக் கணக்கு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | நி.பி. 1645(அ) | வாகனங்களின் சம்பவக் குறிப்பேடுகள் நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் உரிய படிவத்தின் படி பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மேற்கூறிய நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (iii) | நி.பி. 1646 | 03 வாகனங்களின் ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஓட்ட அட்டவணை அனைத்தும் மிக விரைவில் சமர்ப்பிக்கப்படும் என. | மேற்கூறிய நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) பொது நிருவாகச் சுற்றறிக்கைகள் | | | |
| (i) 2002 பெப்ரவரி 25 திகதிய 01/2002 இலக்கம் கொண்ட சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 18 வாகனங்களினால் நிறுவனத்தின் பெயருடன் அரச இலச்சினை பொறிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் சபைக்குச் சொந்தமான வாகனங்களில் அரச இலச்சினை மற்றும் நிறுவனத்தின் பெயர் பதிவு செய்வதற்கு குழுத் தீர்மானத்தின் பின்னர் மேற்கொள்ளப்படும் என. | அரச இலச்சினை மற்றும் நிறுவனத்தின் பெயர் பொறிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பந்தி 3(1) | பிரதேச சபைக்கு சொந்தமான 16 வாகனங்கள் தொடர்பாக சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உள்ளூராட்சி இயந்திரப் பொறியியலாளரை அறிவுறுத்தி தற்போது சில வாகனங்களில் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது எனவும், ஏனைய வாகனங்களையும் அவரின் பங்குபற்றளுடன் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையில் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 18,481,614 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 6,042,306 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2023 மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| i. | வீதவரி மற்றும் வரி | 3,911 | 3,911 | 2,646 | 8,371 | 5,110 | 5,130 | 3,947 | 7,107 |
| ii. | வாடகை | 3,801 | 10,339 | 10,513 | 852 | 8,670 | 9,323 | 10,513 | 1,025 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 500 | 500 | 640 | - | 600 | 217 | 217 | - |
| iv. | ஏனைய வருமானங்கள் | 35,050 | 35,050 | 12,220 | 25,277 | 110,231 | 167,636 | 167,636 | 2,447 |
| | மொத்தம் | 43,262 | 49,800 | 26,019 | 34,500 | 124,611 | 182,306 | 182,313 | 10,579 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 49 மில்லியன் தொகை காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவை வருமானப் பெறுவனவு உட்பட ரூபா 26 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 34 மில்லியன் தொகை மேலும அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | தாமதமின்றி நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு ரூபா 7,106,829 இற்கான வீதவரி மற்றும் வரி மீதியில் ரூபா 5,469,681 இற்கான தொகையும், சிட்டையிடப்பட்ட ரூபா 3,910,669 தொகையில் ரூபா 2,901,453 இற்கான தொகையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகை மிக விரைவில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | தாமதமின்றி நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 600,937 இற்கான ஏக்கர் வரி நிலுவையொன்று காணப்பட்டது. | செலுத்தப்படாத வரி உரிமையாளர் தொடர்பாக கணிப்பீட்டு சபையொன்றுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | தாமதமின்றி நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடை வாடகை மற்றும் சொத்துக்களை வாடகைக்கு கொடுப்பதன் நிலுவை ரூபா 756,972 தொகையொன்றினை | எதிர் காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதமின்றி நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (உ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 229,208 தொகை மற்றும் ரூபா 73,102,407 தொகையாக காணப்பட்டது. | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறிப்பிட்ட நிறுவனங்களை அறிவுறுத்தி நிலுவைத் தொகையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டிற்காக முச்சக்கர வண்டி அனுமதிப்பத்திரக் கட்டணம் என 182 பேர்களிடம் இருந்து ரூபா 136,500 தொகை அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டிருக்காத முச்சக்கர வண்டி தொடர்பாக கண்டறிந்து அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | தாமதமின்றி பெற வேண்டிய வருமானத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

**திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடந்த ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது சேதனப் பசளை உற்பத்தி மற்றும் விற்பனையின் மூலம் கிடைத்த வருமானம் முறையே 44 சதவீதம் மற்றும் 52 சதவீதத்தினால் குறைந்திருந்தது. | பொதுமக்களிடம் உரத்திற்காக கிடைத்திருந்த கேள்வி குறைவடைந்திருந்தது. | வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியளவில் ஓய்வுபெறல் / இடமாற்றம் பெறல் போன்ற காரணங்களினால் 14 உத்தியோகத்தர்களிடம் ரூபா 299,243 தொகை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தாமதம் இன்றி கடன் தொகையினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 03 ஏக்கர் 03 ரூட் 31.3 பர்சஸ் அளவினைக் கொண்ட மெடிபொக்க ஸனி ஸயிட் தோட்டத்தின் மதிப்பீட்டு விற்பனைப் பெறுமதியில் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவு 154(1) இற்கு இணங்க அறவிடப்பட வேண்டிய 1 சதவீத வரி ரூபா 1,258,520 தொகை காணப்பட்டதுடன், கணக்காய்வுத் திகதி அளவில் அவற்றில் ரூபா 758,520 தொகை நிலுவையாக காணப்பட்டது. | நிலுவை வரியை அறவீடு செய்வதற்காக குறிப்பிட்ட நிறுவனத்திற்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டது என. | தாமதம் இன்றி வரி அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | சபைக்குச் சொந்தமான கப் வண்டி ஒன்று மற்றும் டிரக்டர் டேலர் ஒன்று அப்புறப்படுத்துவதற்காக முறையே 2015 மற்றும் 2019 ஆண்டுகளின் போது இனங்கண்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போதும் அந்த வாகனங்களை அப்புறப்படுத்தியிருக்கவில்லை. | அப்புறப்படுத்துவற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | தாமதம் இன்றி அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான டிரக்டர் வண்டியொன்று, முச்சக்கர வண்டியொன்று, மோட்டார் சைக்கிள் ஒன்று மற்றும் டிரக்டர் டேலர் ஒன்று 04 மாதங்கள் முதல் 02 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் முதல் செயற்பாடு காணப்பட்டதுடன், அந்த வாகனங்களை திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு தேவையான அலுவல்கள் மேற்கொண்டிருக்கவில்லை. | திருத்த வேலை மேற்கொள்வதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | தாமதம் இன்றி திருத்த வேலைகள் மேற்கொள்வதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2004 ஆண்டின் போது நன்கொடையாக கிடைத்திருந்த கம்பெக்டர் வாகனத்தின் உரிமையை சபைக்கு உரித்தாக்கியிருக்காததுடன், அந்த வாகனம் நீண்ட காலமாக பயன்படுத்தாமல் சபை வளாகத்தில் சிதைவடைந்து காணப்பட்டது. | இந்த வாகனத்தின் ஆவனங்கள் அல்லது அந்த வாகனத்தின் புத்தகம் சபைக்கு கிடைத்திருக்காமையால் மற்றும் ஏனைய நிறுவனம் ஒன்றின் வாகனமொன்றினை பராமரிக்க முடியாமையால் வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. | தாமதம் இன்றி அப்புறப்படுத்துவதற்கு அல்லது குறிப்பிட்ட நிறுவனத்திற்கு திருப்பிக் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகளில் அடங்கியுள்ள ரூபா 163,340 தொகை பெறுமதியான 05 குப்பை வண்டி / கை வண்டிகள் மற்றும் 02 துவிச்சக்கர வண்டிகள் பௌதீக ரீதியாக காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | இந்த கை வண்டிகள் மற்றும் துவிச்சக்கர வண்டிகள் தொடர்பாக கண்டறிந்து தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | பௌதீக ரீதியாக காணப்படல் தொடர்பாக கண்டறிந்து அதன்படி தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது சபையினால் தனதாக்கப்பட்ட 06 காணித் துண்டுகள் தொடர்பாக கூட்டுப் பெறுமதி ரூபா 39,210,000 தொகை நிலையான சொத்துப் பதிவேட்டில் உட்படுத்தியிருக்கவில்லை. | குறிப்பிட்ட 06 காணித் துண்டுகளும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | தாமதமின்றி நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்த வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது சபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த தளபாட உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் பெறுமதி முறையே ரூபா 402,900 தொகை மற்றும் ரூபா 168,450 தொகை பொருட் பதிவேட்டில் உட்படுத்தியிருக்கவில்லை. | அடுத்த பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் படி பொருட் பதிவேட்டில் உட்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | தாமதமின்றி பொருட் பதிவேட்டில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | வேறு நிறுவனங்களின் பெயரில் பதிவு செய்திருந்த சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 04 வாகனங்களின் உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்கு மீளாய்வாண்டளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | தாமதம் இன்றி உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 குறிக்கோள்களுக்கு புறம்பான தொழிற்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி (கைத்தொழில் பிரிவின் துறைசார் திட்டம்) நிறைவேற்றப்பட வேண்டிய 17 செயற்திட்டங்களில் 15 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்காததுடன், அதற்காக வருடாந்த பாதீட்டின் மூலம் | அரச நிதிக் கட்டுப்பாடு தொடர்பான சுற்றறிக்கையின் காரணமாக திட்டமிடப்பட்ட செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்கு முடியாமல் இருந்தது என. | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு நேரொத்ததாக சபையின் அலுவல்கள் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 94,200,000 இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி (சமூக அபிவிருத்தி பிரிவின் துறைசார் திட்டம்) 11 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த போதிலும் அவற்றில் 06 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்காததுடன், அதற்காக வருடாந்த பாதீட்டின் மூலம் ரூபா 11,000,000 இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. | சபை நிதியத்தில் போதியளவு நிதி காணப்படாமையால் செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்கு முடியாமல் போனது என. | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு நேரொத்ததாக சபையின் அலுவல்கள் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |